அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாமல் புறவாசல் வழியாக

பா.ஜ.க. அச்சுறுத்தல் செல்லுபடியாகாது!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஜூன் 15– அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியாதவர்களை, புறவாசல் வழியாக அச்சுறுத்தப் பார்க்கும் பா.ஜ.க. வின் அரசியல் செல்லுபடியாகாது" எனவும் "அதனை அவர்களே உணரும் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது" எனவும் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:–

தன் வசம் இருக்கும் விசாரணை அதிகார அமைப்புகள் மூலமாகத் தனக்கு எதிரான அரசியல் சக்திகளை பா.ஜ.க. பழிவாங்கும். அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி இதுமட்டும்தான் என்று நான் ஏற்கனவே சொல்லி இருந்தேன். இதற்கு இந்திய அளவில் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் சமீப காலங்களில் பல்வேறு மாநிலங்களில் நடந்துள்ளன.

இந்த நிலையில் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களது இல்லத்தில் அமலாக்கத்துறையினர் விசாரணை நடத்தினார்கள்.

அமைச்சர் செந்தில் பாலாஜி

முழு ஒத்துழைப்பு!

'சோதனைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்போம், எந்தச் சோதனையாக இருந்தாலும் ஒத்துழைப்பு தருவேன், ஆவணங்கள் கைப்பற்றப்பட்டாலும் அதற்கு உரிய விளக்கம் அளிக்கத் தயார்' என்று அமைச்சர் செந்தில் பாலாஜியே பேட்டியும் அளித்துள்ளார். விசாரணை நடைபெறும் இடத்தில் இருந்து முழு ஒத்துழைப்பைத் தந்து வருகிறார்.

இந்த நிலையில் தலைமைச் செயலகத்தில் அமைச்சரது அறைக்குச் சென்று தேடுதல் நடத்த வேண்டிய தேவை என்ன ஏற்பட்டது என்று தெரியவில்லை. தலைமைச் செயலகத்திலும் ரெய்டு நடத்துவோம் என்று காட்டவோ, அல்லது அதனைக் காட்டி மிரட்டவோ விரும்புகிறார்களா எனத் தெரியவில்லை. இவை எல்லாம் விசாரணை அமைப்பானது அரசியல் உள்நோக்கத்துடன் செயல்படுவதையே எடுத்துக் காட்டுகிறது.

கூட்டாட்சித்

தத்துவத்துக்கே களங்கம்!

ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன் தமிழ்நாட்டுக்கு வந்து சென்ற நிலையில் உடனடியாக இதுபோன்ற காரியங்கள் நடக்கிறது என்றால் என்ன பொருள்? பொதுமேடைகளில் தி.மு.க.வையும் ஆட்சியையும் கடுமையாக விமர்சித்துச் சென்றார் ஒன்றிய அமைச்சர் அவர்கள். அதற்குத் தகுந்த விளக்கத்தை நாங்கள் கொடுத்துவிட்டோம். ஆனால் இது போன்ற அமலாக்கத்துறை தாக்குதல்களைத் தலைமைச் செயலகத்தின் மீதே தொடுப்பது கூட்டாட்சித் தத்துவத்துக்கே களங்கம் ஏற்படுத்துவது ஆகும்.

ஒரு மாநில அரசின் மாண்பு காக்கும் தலைமைச் செயலகத்துக்குள் மத்திய காவல் படையை அழைத்து வந்து அதிகாரிகள் சோதனை நடத்துவதுதான் அரசியல்சட்ட மாண்பைக் காப்பதா?

மிகத் தவறான,

முன்னுதாரணங்கள்!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 2016ஆம் ஆண்டு அன்றைய தலைமைச் செயலாளராக இருந்த ராம் மோகன்ராவ் அவர்களது வீட்டிலும், தலைமைச் செயலகத்திலும் வருமான வரித்துறை ரெய்டு நடத்தியது. "தலைமைச் செயலகம் என்பது மாநில அரசின் மூளை போன்ற முக்கியப் பகுதி. கூட்டுறவு கூட்டாட்சி பேசிக் கொண்டே அந்த தலைமைச் செயலகத்தில் மத்திய போலீஸ் படையை அனுப்பி, தலைமைச் செயலாளராக இருந்த ராம்மோகன் ராவ் அலுவலகத்துக்குள்ளேயே ரெய்டு நடத்துமாறு வருமான வரித் துறையை இயக்கியது ஒன்றிய அரசு. இது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிரானது" என்று, அன்றைய ஆட்சியாளர்கள் கண்டிக்காமலும் கண்டுகொள்ளாமலும் இருந்தபோது, அதனைக் கண்டித்து நான் அறிக்கை வெளியிட்டேன். எனவே, யாருக்கு நடந்தது என்பதல்ல முக்கியம். எங்கு நடத்தப்பட்டது என்பதே முக்கியம். மிகத்தவறான முன்னுதாரணங்களைத் தொடர்ந்து பா.ஜ.க. உருவாக்கி வருகிறது.

பா.ஜ.க.வின் மிரட்டல் அரசியலை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அரசியல்ரீதியாக எதிர்கொள்ள முடியாதவர்களை, இதுபோன்ற புறவாசல் வழியாக அச்சுறுத்தப் பார்க்கும் அரசியல் செல்லுபடியாகாது என்பதை பா.ஜ.க. தலைமை உணர வேண்டும். அதனை அவர்களே உணரும் காலம் நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் மூலம் எதிர்க்கட்சிகளை ஒடுக்கத் திட்டம்:

விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. அரசு தவறாகப் பயன்படுத்துகிறது!

கட்சித் தலைவர்கள் மோடி அரசுக்கு கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 15–

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சிகளை ஒடுக்க அச்சுறுத்த அமலாக்கத்துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தொடர்ந்து தவறாகப் பயன்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் தமிழ்நாடு அரசின் மின்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வுத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீடுகள் மற்றும் தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் அமலாக்கத்துறையினர் நுழைந்து சோதனை நடத்தினர்.

இந்த செயலை அகில இந்திய தலைவர்கள் ட்விட்டர் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அவர்களது கண்டனம் வருமாறு:

மல்லிகார்ஜுன கார்கே!

(காங்கிரஸ் தலைவர்)

"எதிர்க்கட்சி தலைவர்களை விசாரணை அமைப்புகள் மூலம் மோடி அரசு அச்சுறுத்தி வருகிறது. விசாரணை அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளை ஒடுக்கிவிடலாம் என மோடி அரசு நினைக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

சரத் பவார்

(தலைவர் – தேசியவாத காங்கிரஸ் கட்சி)

எதிர்க்கட்சிகள் ஆளும் அரசு அமைச்சர்களுக்கு எதிராக அமலாக்கத்துறையின் இடைவிடாத நடவடிக்கைகளை நான் கடுமையாக கண்டிக்கிறேன். செந்தில் பாலாஜியின் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலம், ஜனநாயக விரோத மத்திய அரசுக்கு எதிரான குரலை நசுக்கும் அதன் மோசமான நோக்கத்துடன் அமலாக்கத் துறை இப்போது தென் மாநிலங்களுக்குச் சென்றுள்ளது.

மேற்குவங்க முதலமைச்சர்

மம்தா பானர்ஜி!

"திமுக அரசுக்கு எதிரான பா.ஜ.க.வின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. அரசு தவறாக பயன்படுத்துவது நீடித்து வருகிறது. தமிழ்நாட்டில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரின் அலுவலகம் மற்றும் அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது".

டெல்லி முதல்வர்

அரவிந்த் கெஜ்ரிவால்!

எதிர்க்கட்சிகளைத் துன்புறுத்துவதற்கும் மிரட்டுவதற்கும் மத்திய அமைப்புகளை பா.ஜ.க. தவறாகப் பயன்படுத்துகிறது.

தமிழக மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜிக்கு எதிரான அமலாக்கத்துறை ரெய்டுகளுக்கு கடும் கண்டனம்.

அரசியல் பழிவாங்கலால் பாராமுகமாகி, நமது ஜனநாயகத்திற்கு மாற்ற முடியாத சேதத்தை பா.ஜ.க. ஏற்படுத்துகிறது.

சீதாராம் யெச்சூரி

(பொதுச் செயலாளர்-மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)



சென்னையிலுள்ள தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜியின் அலுவலகத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியதற்கு வன்மையான கண்டனங்கள்.

மோடி அரசு எதிர்க்கட்சி தலைவர்களை குறிவைத்து அமலாக்கத்துறையை ஆயுதமாக ஏந்தியுள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நல் ஆளுமை: தேசிய அளவில் கோவை மாவட்டம் - பிச்சானூர் ஊராட்சிக்கு விருது!

முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - ஒன்றிய அரசின் விருதினை அமைச்சர் ஐ.பெரியசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, ஜூன் 15-

நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (13.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்றதற்காக கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24-ஆம் நாள் தேசிய ஊராட்சிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் தேசிய அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சிகளைப் பெருமைப்படுத்தும் விதமாக, உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த, நிலைத்த வளர்ச்சி இலக்குகளை மையப்படுத்தி 9 கருப்பொருட்கள் இனங்காணப்பட்டு, அவற்றில் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு ஒன்றிய அரசால் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், 2022-23 ஆம் ஆண்டில் தேசிய அளவில் சிறப்பாக செயல்புரிந்த 27 கிராம ஊராட்சிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இதில், தமிழ்நாட்டிற்கு நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு குடியரசுத் தலைவர் அவர்களால் 17.04.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது, பிச்சானூர் ஊராட்சி மன்றத் தலைவர் பொ. மருதாசலம், பிச்சானூர் ஊராட்சி செயலர் திருமதி.வ.உமாமகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

யோகா – இயற்கை மருத்துவ சுயநிதிக் கல்லூரி

மாணவர் சேர்க்கைக் கலந்தாலோசனைக் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 15-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று முன்தினம் (13.06.2023) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், யோகா மற்றும் இயற்கை மருத்துவ சுயநிதி கல்லூரி மாணவர் சேர்க்கை பகிர்ந்தளிப்பு தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகத்தின் கீழ் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரிகளுடன் இடங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டை பொறுத்தவரை 17 கல்லூரிகள் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளாக இயங்கி கொண்டிருக்கிறது. 17 சுயநிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடாக 993 பேரும், 2 அரசு கல்லூரிகளில் 160 பேரும் என்று மொத்தமாக 1153 மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. மேலும், 17 சுயநிதி கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் 557 இடங்கள் தமிழ்நாடு அரசின் தேர்வுக் குழுவினரால் நிரப்பப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் 1710 இடங்கள் ஒவ்வொரு ஆண்டும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் நிரப்பப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் தொடங்க வேண்டிய வகுப்புகள், மாணவர் சேர்க்கை தள்ளிப்போவதால் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தள்ளிப்போவதாக குற்றச்சாட்டு இந்த சுயநிதி கல்லூரிகளின் நிர்வாகிகளால் தெரிவிக்கப்பட்டது. நீட் தேர்வு மற்றும் அதன் கலந்தாய்வினால் இந்த காலதாமதம் ஏற்பட்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு துறையின் செயலாளர் அவர்கள் நீட் தேர்வுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், 12ம் வகுப்பு மதிப் பெண்கள் அடிப்படையில் கல்லூரிகளில் சேர்க்கை நடைபெற்று வருவதால் நீட் தேர்வு முடிவுகள் வரும் வரையில் இதற்காக காத்திருக்க வேண்டாம், 12ம் வகுப்பு முடிவுகள் வந்தவுடனே கலந்தாய்வு நடத்த அனுமதிக்கலாம் என்று இந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவினால் 17 சுயநிதி கல்லூரிகளின் நிர்வாகிகளும் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். யோகா மற்றும் இயற்கை மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நடத்தப்படவுள்ளது, இந்த நடவடிக்கைகளினால் இந்த படிப்புகளுக்கான 1710 இடங்களும் முழுமையாக நிரம்ப வாய்ப்புள்ளது.

மருத்துவப் பணியிடங்கள்

தமிழ்நாட்டில் மருத்துவர்கள் பணிச்சுமையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து மிகவும் தவறானதாகும். மருத்துவ துறையில் காலியாக உள்ள 1021 பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை மேற்கொண்டபோது, மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதுவும் முடிவிற்கு வந்து தமிழ் தேர்வு சம்பந்தமாக 1021 இடங்களுக்கு சுமார் 25,000 மாணவர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். மேலும் தமிழ் தேர்வு எழுதியவர்களுக்கு தேர்வு முடிவு வெளிடப்பட்டுவிட்டது. தற்போது மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்திற்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இறுதி தேர்வு முடிவுகள் இன்னும் ஒரு சில நாட்களில் வெளியிடப்பட விருக்கிறது. தேர்வு முடிவு வெளியிடப்பட்டவுடன் 1021 மருத்துவர்களும், 980 மருந்தாளுநர்களும் தேர்வு செய்யப்படவுள்ளனர். இதில் 980 மருந்தாளுநர்கள் பணிக்கு மட்டும் 43,000 பேர் விண்ணப்பித்து இருந்தார்கள். எனவே காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை பணியிடங்கள்

தற்போது மாவட்ட நல வாழ்வு சங்கத்தினால் (District Health Society) 500 புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் தற்போது இணைப் பேராசிரியர்கள் 30 பேர், உதவிப் பேராசிரியர்கள் 100 பேர் என்று ஆக மொத்தம் 130 பணியிடங்களுக்கு கலந்தாய்வு நடத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் அம்மருத்துவமனைக்கு தனியாக ஒரு இயக்குநர், இரண்டு உதவி நிலைய மருத்துவர் நியமிக்கப்பட விருக்கிறார்கள். இதையும் கடந்து மருத்துவமனை நிர்வாகத்தை மிகச் சிறப்பாக செய்வதற்கு புதியதாக 757 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த 757 பணியிடங்களுக்கான அரசாணை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. எனவே மருத்துவ பணியிடங்கள் நிரப்புவதற்கு முக்கியத்துவம் இந்த அரசு வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மாவட்ட நல வாழ்வு சங்கத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்கள், 21 மாநகராட்சிகள், 63 நகராட்சிகள் போன்ற பகுதிகளில் புதிய மருத்துவமனைகள் எங்கெல்லாம் திறக்கப் பட்டதோ அங்கெல்லாம் மருத்துவ பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. மேலும் புதிய மருத்துவ கட்டமைப்பு உருவாக்கப்படும் போது அதற்கேற்ப பணியிடங்களை அரசு உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறது. எனவே ஏற்கெனவே இருக்கின்ற பணியிடங்களில் தான் புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது தவறான விவாதமாகும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் ஹோமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி. கே.ராஜேந்திரன், இணை இயக்குநர்கள் மரு.மணவாளன், மரு.பார்த்திபன் மற்றும் தனியார் கல்லூரி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.